# Jer

## Chapter 33

Tamil Interlinear

Reference: Tamil Indian Revised Version (IRV)

1

וַיְהִ֥י -மற்றும்-வந்தது H1961
דְבַר־ வார்த்தையாகிய- H1697
יְהוָ֛ה கர்த்தரின் H3068
אֶֽל־ -நோக்கி- H0413
יִרְמְיָ֖הוּ எரேமியாவுக்கு H3414
שֵׁנִ֑ית இரண்டாம்முறை H8145
וְהוּא֙ -மற்றும்-அவன் H1931
עוֹדֶ֣נּוּ இன்னும் H5750
עָצ֔וּר அடைக்கப்பட்டிருந்தான் H6113
בַּחֲצַ֥ר -இல்-முற்றத்தில்
הַמַּטָּרָ֖ה -அந்த-காவல் H4307
לֵאמֹֽר׃ சொல்லி: H0559

> எரேமியா இன்னும் காவல்நிலையத்தின் முற்றத்தில் அடைக்கப்பட்டிருக்கும்போது, யெகோவாவுடைய வார்த்தை இரண்டாம்முறை அவனுக்கு உண்டாகி, அவர்:

2

כֹּֽה־ இவ்வாறு- H3541
אָמַ֥ר சொன்னார் H0559
יְהוָ֖ה கர்த்தர் H3068
עֹשָׂ֑הּ அதைச்செய்கிறவர்
יְהוָ֗ה கர்த்தர் H3068
יוֹצֵ֥ר உருவாக்குகிறவர் H3335
אוֹתָ֖הּ அதை H0853
לַהֲכִינָ֑הּ நிலைநிறுத்தும்படி
יְהוָ֖ה கர்த்தர் H3068
שְׁמֽוֹ׃ அவர்-நாமம் H8034

> இதைச் செய்கிற கர்த்தருமாய், இதை உறுதிப்படுத்த இதை உண்டாக்குகிற கர்த்தருமாயிருக்கிற யேகோவா என்னும் பெயருள்ளவர் சொல்லுகிறது என்னவென்றால்:

3

קְרָ֥א அழை H7121
אֵלַ֖י என்னை H0413
וְאֶֽעֱנֶ֑ךָּ -மற்றும்-பதிலளிப்பேன்-உனக்கு
וְאַגִּ֤ידָה -மற்றும்-அறிவிப்பேன் H5046
לְּךָ֙ உனக்கு
גְּדֹל֣וֹת பெரிய
וּבְצֻר֔וֹת -மற்றும்-மறைவான H1219
לֹ֖א இல்லை H3808
יְדַעְתָּֽם׃ அறிந்தாய்-அவற்றை H3045
ס —

> என்னை நோக்கிக் கூப்பிடு, அப்பொழுது நான் உனக்கு பதில் கொடுத்து, நீ அறியாததும் உனக்கு புரியாதததுமான பெரிய காரியங்களை உனக்கு அறிவிப்பேன்.

4

כִּי֩ ஏனெனில்
כֹ֨ה இவ்வாறு H3541
אָמַ֤ר சொன்னார் H0559
יְהוָה֙ கர்த்தர் H3068
אֱלֹהֵ֣י தேவனாகிய H0430
יִשְׂרָאֵ֔ל இஸ்ரவேலின் H3478
עַל־ -குறித்து-
בָּתֵּי֙ வீடுகளையும்
הָעִ֣יר -இந்த-பட்டணத்தின்
הַזֹּ֔את இதன் H2063
וְעַל־ -மற்றும்-குறித்து-
בָּתֵּ֖י வீடுகளையும்
מַלְכֵ֣י ராஜாக்களின் H4428
יְהוּדָ֑ה யூதாவின் H3063
הַנְּתֻצִ֔ים இடிக்கப்பட்ட H5422
אֶל־ -நோக்கி- H0413
הַסֹּלְל֖וֹת -அந்த-முற்றுகைமேடுகளுக்கும் H5550
וְאֶל־ -மற்றும்-நோக்கி- H0413
הֶחָֽרֶב׃ -அந்த-பட்டயத்துக்கும் H2719

> கோட்டை மதில்களினாலும் பட்டயத்தாலும் இடிக்கப்பட்டவைகளாகிய இந்த நகரத்தின் வீடுகளையும், யூதா ராஜாக்களின் வீடுகளையும் குறித்து:

5

| | | | | | |
|---|---|---|---|---|---|
| בָּאִים | לְהִלָּחֵם | אֶת־ | הַכַּשְׂדִּים | וּלְמַלְאָם | אֶת־ |
| வருகிறவர்கள் | போர்செய்ய | -உடன் | -அந்த-கல்தேயரை | -மற்றும்-நிரப்ப | -ஐ |
| H0935 | | H0853 | H3778 | H4390 | H0854 |

| | | | | |
|---|---|---|---|---|
| פִּגְרֵי | הָאָדָם | אֲשֶׁר־ | הִכֵּיתִי | בְאַפִּי |
| பிணங்களால் | -அந்த-மனிதர்களின் | யாரை- | அடித்தேன் | என்-கோபத்திலும் |
| H6297 | H0120 | | H5221 | H0639 |

| | | | |
|---|---|---|---|
| וּבַחֲמָתִי | וַאֲשֶׁר | הִסְתַּרְתִּי | פָנַי |
| -மற்றும்-என்-உக்கிரத்திலும் | -மற்றும்-எவர்களை | மறைத்தேன் | என்-முகத்தை |
| H2534 | | H5641 | H6440 |

| | | | | |
|---|---|---|---|---|
| מֵהָעִיר | הַזֹּאת | עַל | כָּל־ | רָעָתָם׃ |
| -இந்த-பட்டணத்திலிருந்து | இதிலிருந்து | -மேல் | எல்லா- | அவர்கள்-தீமையினிமித்தம் |
| | H2063 | | H3605 | |

> இந்த நகரத்தின் எல்லாப் பொல்லாப்பின் காரணமாக நான் என் முகத்தை மறைத்ததினால் என் கோபத்திலும் கடுங்கோபத்திலும் வெட்டப்பட்ட மனிதச் சடலங்களினால் அவைகளை நான் நிறைப்பதற்காகவே, அவர்கள் கல்தேயருடன் போர் செய்யப்போகிறார்கள்.

6

| | | | | |
|---|---|---|---|---|
| הִנְנִי | מַעֲלֶה־ | לָּהּ | אֲרֻכָה | וּמַרְפֵּא |
| இதோ-நான் | கொண்டுவருவேன்- | அதற்கு | சுகவாழ்வையும் | -மற்றும்-குணமாக்குவதையும் |
| H2009 | H5927 | | H0724 | H4832 |

| | | |
|---|---|---|
| וּרְפָאתִים | וְגִלֵּיתִי | לָהֶם |
| -மற்றும்-குணமாக்குவேன்-அவர்களை | -மற்றும்-வெளிப்படுத்துவேன் | அவர்களுக்கு |
| H7495 | H1540 | H1992 |

| | | |
|---|---|---|
| עֲתֶרֶת | שָׁלוֹם | וֶאֱמֶת׃ |
| மிகுதியான | சமாதானத்தையும் | -மற்றும்-சத்தியத்தையும் |
| H6283 | H7965 | H0571 |

> இதோ, நான் அவர்களுக்குச் சவுக்கியமும் ஆரோக்கியமும் வரச்செய்து, அவர்களைக் குணமாக்கி, அவர்களுக்குப் பரிபூரண சமாதானத்தையும் சத்தியத்தையும் வெளிப்படுத்துவேன்.

7

| | | | | | |
|---|---|---|---|---|---|
| וַהֲשִׁבֹתִי | אֶת־ | שְׁבוּת | יְהוּדָה | וְאֵת | שְׁבוּת |
| -மற்றும்-திருப்புவேன் | -ஐ | சிறையிருப்பை | யூதாவின் | -மற்றும்-ஐ | சிறையிருப்பை |
| H7725 | H0853 | H7622 | H3063 | H0853 | H7622 |

| | | |
|---|---|---|
| יִשְׂרָאֵל | וּבְנִתִים | כְּבָרִאשֹׁנָה׃ |
| இஸ்ரவேலின் | -மற்றும்-கட்டுவேன்-அவர்களை | முன்போல |
| H3478 | H1129 | H7223 |

> நான் யூதாவின் சிறையிருப்பையும், இஸ்ரவேலின் சிறையிருப்பையும் திருப்பி, முன்னிருந்ததுபோல அவர்களைக் கட்டுவித்து,

8
וְטִ֣הַרְתִּ֔ים -மற்றும்-சுத்திகரிப்பேன்-அவர்களை H2891
מִכָּל־ எல்லா- H3605
עֲוֺנָ֖ם அவர்கள்-அக்கிரமத்திலிருந்து H5771
אֲשֶׁ֣ר எதிலே
חָֽטְאוּ־ பாவஞ்செய்தார்கள்- H2398
לִ֑י எனக்கு-விரோதமாய்
וְסָלַחְתִּ֗י -மற்றும்-மன்னிப்பேன் H5545
[לכול־] — H3605
(לְכָל־) எல்லா- H3605
עֲוֺנ֣וֹתֵיהֶם֙ அவர்கள்-அக்கிரமங்களை H5771
אֲשֶׁ֣ר எதிலே
חָֽטְאוּ־ பாவஞ்செய்தார்கள்- H2398
לִ֔י எனக்கு-விரோதமாய்
וַאֲשֶׁ֥ר -மற்றும்-எதிலே
פָּ֖שְׁעוּ துரோகஞ்செய்தார்கள் H6586
בִֽי׃ எனக்கு-விரோதமாய்

> அவர்கள் எனக்கு விரோதமாகக் குற்றம் செய்த அவர்களுடைய எல்லா அக்கிரமங்களுக்கும் அவர்களை விலக்கிச் சுத்தப்படுத்தி, அவர்கள் எனக்கு விரோதமாகக் குற்றம் செய்து, எனக்கு விரோதமாகத் துரோகம் செய்த அவர்களுடைய எல்லா அக்கிரமங்களையும் மன்னிப்பேன்.

9
וְהָ֣יְתָה -மற்றும்-ஆகும் H1961
לִּ֗י எனக்கு
לְשֵׁ֤ם -நாமமாக H8034
שָׂשׂוֹן֙ மகிழ்ச்சியின் H8342
לִתְהִלָּ֣ה -புகழ்ச்சிக்கும் H8416
וּלְתִפְאֶ֔רֶת -மற்றும்-மகிமைக்கும் H8597
לְכֹל֙ எல்லா- H3605
גּוֹיֵ֣י ஜாதிகளுக்கு
הָאָ֔רֶץ -அந்த-பூமியின் H0776
אֲשֶׁ֨ר யாவர்
יִשְׁמְע֜וּ கேட்பார்கள் H8085
אֶת־ -ஐ H0853
כָּל־ எல்லா- H3605
הַטּוֹבָה֙ -அந்த-நன்மையை
אֲשֶׁ֤ר எதை
אָנֹכִי֙ நான் H0595
עֹשֶׂ֣ה செய்கிறேன்
אֹתָ֔ם அவர்களுக்கு H0853
וּפָחֲד֣וּ -மற்றும்-பயப்படுவார்கள் H6342
וְרָגְז֗וּ -மற்றும்-நடுங்குவார்கள் H7264
עַ֤ל -மேல்
כָּל־ எல்லா- H3605
הַטּוֹבָה֙ -அந்த-நன்மையினிமித்தமும்
וְעַל֙ -மற்றும்-மேல்
כָּל־ எல்லா- H3605
הַשָּׁל֔וֹם -அந்த-சமாதானத்தினிமித்தமும் H7965
אֲשֶׁ֥ר எதை
אָנֹכִ֖י நான் H0595
עֹ֥שֶׂה செய்கிறேன்
לָּֽהּ׃ அதற்கு
ס —

> நான் அவர்களுக்குச் செய்யும் நன்மைகளையெல்லாம் கேட்கப்போகிற பூமியின் எல்லா தேசங்களுக்கு முன்பாக அது எனக்கு மகிழ்ச்சியுள்ள புகழ்ச்சியாகவும் மகிமையாகவும் இருக்கும்; நான் அவர்களுக்கு அருளும் எல்லா நன்மைக்காகவும், எல்லாச் சமாதானத்திற்காகவும் இவர்கள் பயந்து நடுங்குவார்கள் என்று இஸ்ரவேலின் தேவனாகிய யெகோவா சொல்லுகிறார்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| הַזֶּה | בַּמָּקוֹם־ | יִשָּׁמַע | עוֹד | יְהוָה | אָמַר | כֹּה | 10 |
| இதில் | -இந்த-இடத்தில்- | கேட்கப்படும் | இன்னும் | கர்த்தர் | சொன்னார் | இவ்வாறு | |
| H2088 | H4725 | H8085 | H5750 | H3068 | H0559 | H3541 | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| אָדָם | מֵאֵין | הוּא | חָרֵב | אֹמְרִים | אַתֶּם | אֲשֶׁר |
| மனிதன் | இல்லாமல் | அது | பாழாய் | சொல்கிறீர்கள் | நீங்கள் | எதைக்குறித்து |
| H0120 | H0369 | H1931 | | H0559 | | |

| | | | |
|---|---|---|---|
| יְהוּדָה | בְּעָרֵי | בְּהֵמָה | וּמֵאֵין |
| யூதாவின் | -இல்-பட்டணங்களிலும் | மிருகம் | -மற்றும்-இல்லாமல் |
| H3063 | | H0929 | H0369 |

| | | | | |
|---|---|---|---|---|
| אָדָם | מֵאֵין | הַנְשַׁמּוֹת | יְרוּשָׁלַם | וּבְחֻצוֹת |
| மனிதன் | இல்லாமல் | -அந்த-பாழாக்கப்பட்ட | எருசலேமின் | -மற்றும்-இல்-தெருக்களிலும் |
| H0120 | H0369 | H8074 | H3389 | H2351 |

| | | | |
|---|---|---|---|
| בְּהֵמָה׃ | וּמֵאֵין | יוֹשֵׁב | וּמֵאֵין |
| மிருகம் | -மற்றும்-இல்லாமல் | குடியிருப்பவன் | -மற்றும்-இல்லாமல் |
| H0929 | H0369 | H3427 | H0369 |

> மனிதனில்லாமலும் மிருகமில்லாமலும் வெட்டவெளியாய்க் கிடக்கிறதென்று, நீங்கள் சொல்லுகிற இவ்விடத்திலும், யூதாவின் பட்டணங்களிலும் மனிதனாவது மிருகமாவது இல்லாமல் அழிக்கப்பட்ட எருசலேமின் வீதிகளிலும்,

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| חָתָן | קוֹל | שִׂמְחָה | וְקוֹל | שָׂשׂוֹן | קוֹל | 11 |
| மணவாளனின் | குரல் | சந்தோஷத்தின் | -மற்றும்-குரல் | மகிழ்ச்சியின் | குரல் | |
| H2860 | | H8057 | | H8342 | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| יְהוָה | אֶת־ | הוֹדוּ | אֹמְרִים | קוֹל | כַּלָּה | וְקוֹל |
| கர்த்தரை | -ஐ | துதியுங்கள் | சொல்கிறவர்களின் | குரல் | மணவாட்டியின் | -மற்றும்-குரல் |
| H3068 | H0853 | H3034 | H0559 | | H3618 | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| לְעוֹלָם | כִּי־ | יְהוָה | טוֹב | כִּי־ | צְבָאוֹת |
| -என்றென்றைக்கும் | ஏனெனில்- | கர்த்தர் | நல்லவர் | ஏனெனில்- | சேனைகளின் |
| H5769 | | H3068 | | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| כִּי־ | יְהוָה | בֵּית | תּוֹדָה | מְבִאִים | חַסְדּוֹ |
| ஏனெனில்- | கர்த்தரின் | வீட்டுக்கு | ஸ்தோத்திரத்தை | கொண்டுவருகிறவர்கள் | அவர்-கிருபை |
| | H3068 | | H8426 | H0935 | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| יְהוָה׃ | אָמַר | כְּבָרִאשֹׁנָה | הָאָרֶץ | שְׁבוּת־ | אֶת־ | אָשִׁיב |
| கர்த்தர் | சொன்னார் | முன்போல | -அந்த-தேசத்தின் | சிறையிருப்பை- | -ஐ | திருப்புவேன் |
| H3068 | H0559 | H7223 | H0776 | H7622 | H0853 | H7725 |

ס

> இன்னும் கொண்டாட்டத்தின் சத்தமும், மகிழ்ச்சியின் சத்தமும், மணமகனின் சத்தமும், மணமகளின் சத்தமும்: சேனைகளின் யெகோவாவை துதியுங்கள், யெகோவா நல்லவர், அவர் கிருபை என்றுமுள்ளதென்று சொல்லுகிறவர்களின் சத்தமும், யெகோவாவுடைய ஆலயத்திற்கு நன்றி பலிகளைக் கொண்டுவருகிறவர்களின் சத்தமும் கேட்கப்படும் என்று யெகோவா சொல்லுகிறார்; அவர்கள் முன்னிருந்தது போல இருப்பதற்கு தேசத்தின் சிறையிருப்பைத் திருப்புவேன் என்று யெகோவா சொல்லுகிறார்.

| בַּמָּקוֹם | וְהָיָה | עוֹד | צְבָאוֹת | יְהוָה | אָמַר | כֹּה־ | 12 |
|---|---|---|---|---|---|---|---|
| -இந்த-இடத்தில் | இருக்கும் | இன்னும் | சேனைகளின் | கர்த்தர் | சொன்னார் | இவ்வாறு- | |
| H4725 | H1961 | H5750 | | H3068 | H0559 | H3541 | |

| וּבְכָל־ | בְּהֵמָה | וְעַד־ | אָדָם | מֵאֵין־ | הֶחָרֵב | הַזֶּה |
|---|---|---|---|---|---|---|
| -மற்றும்-எல்லா- | மிருகம் | -மற்றும்-வரை- | மனிதன் | இல்லாமல்- | -அந்த-பாழான | இதில் |
| H3605 | H0929 | H5704 | H0120 | H0369 | | H2088 |

| צֹאן׃ | מַרְבִּצִים | רֹעִים | נְוֵה | עָרָיו |
|---|---|---|---|---|
| ஆடுகளை | படுக்கவைக்கிற | மேய்ப்பர்களின் | இருப்பிடம் | அதன்-பட்டணங்களிலும் |
| H6629 | H7257 | | | |

> மனிதனும் மிருகமும் இல்லாமல் வெட்டவெளியாக கிடக்கிற இவ்விடத்திலும், இதை சுற்றியுள்ள பட்டணங்களிலும், ஆட்டுமந்தையை மேய்த்துத் திருப்புகிற இடங்கள் உண்டாயிருக்கும் என்று சேனைகளின் யெகோவா சொல்லுகிறார்.

| בְּעָרֵי | הָהָר | בְּעָרֵי | 13 |
|---|---|---|---|
| -இல்-பட்டணங்களிலும் | -அந்த-மலைநாட்டின் | -இல்-பட்டணங்களிலும் | |
| | H2022 | | |

| הַנֶּגֶב | וּבְעָרֵי | הַשְּׁפֵלָה |
|---|---|---|
| -அந்த-தெற்கின் | -மற்றும்-இல்-பட்டணங்களிலும் | -அந்த-தாழ்வான-நிலத்தின் |
| H5045 | | H8219 |

| יְרוּשָׁלִַם | וּבִסְבִיבֵי | בִנְיָמִן | וּבְאֶרֶץ |
|---|---|---|---|
| எருசலேமின் | -மற்றும்-சுற்றுப்புறங்களிலும் | பெனியமீனின் | -மற்றும்-இல்-தேசத்திலும் |
| H3389 | H5439 | H1144 | H0776 |

| עַל־ | הַצֹּאן | תַּעֲבֹרְנָה | עֹד | יְהוּדָה | וּבְעָרֵי |
|---|---|---|---|---|---|
| -மேல்- | -அந்த-ஆடுகள் | கடந்துபோகும் | இன்னும் | யூதாவின் | -மற்றும்-இல்-பட்டணங்களிலும் |
| | H6629 | | H5750 | H3063 | |

| ס | יְהוָה׃ | אָמַר | מוֹנֶה | יְדֵי |
|---|---|---|---|---|
| — | கர்த்தர் | சொன்னார் | எண்ணுகிறவனின் | கைகளின் |
| | H3068 | H0559 | H4487 | H3027 |

> மலைத்தேசமான பட்டணங்களிலும், பள்ளத்தாக்குகளான பட்டணங்களிலும், தென்திசைப் பட்டணங்களிலும் பென்யமீன் நாட்டிலும், எருசலேமின் சுற்றுப்புறங்களிலும், யூதாவின் பட்டணங்களிலும், ஆட்டுமந்தைகள் தங்களை எண்ணுகிறவனுடைய கைக்குள்ளாக நடந்துவரும் என்று யெகோவா சொல்லுகிறார்.

| אֶת־ | וַהֲקִמֹתִי | יְהוָה | נְאֻם־ | בָּאִים | יָמִים | הִנֵּה | 14 |
|---|---|---|---|---|---|---|---|
| -ஐ | -மற்றும்-நிறைவேற்றுவேன் | கர்த்தர் | என்கிறார்- | வருகின்றன | நாட்கள் | இதோ | |
| H0853 | | H3068 | H5002 | H0935 | H3117 | H2009 | |

| יִשְׂרָאֵל | בֵּית | אֶל־ | דִּבַּרְתִּי | אֲשֶׁר | הַטּוֹב | הַדָּבָר |
|---|---|---|---|---|---|---|
| இஸ்ரவேலின் | வீட்டுக்கு | -நோக்கி- | பேசினேன் | எதை | -அந்த-நல்ல | -அந்த-வார்த்தையை |
| H3478 | | H0413 | H1696 | | | H1697 |

| יְהוּדָה׃ | בֵּית | וְעַל־ |
|---|---|---|
| யூதாவின் | வீட்டுக்கு | -மற்றும்-மேல்- |
| H3063 | | |

> இதோ, நாட்கள் வருமென்று யெகோவா சொல்லுகிறார், அப்பொழுது நான் இஸ்ரவேலின் மக்களுக்கும், யூதாவின் மக்களுக்கும் சொன்ன நல்வார்த்தையை நிறைவேற்றுவேன்.

15
בַּיָּמִים -அந்த-நாட்களில் H3117
הָהֵם அவற்றில் H1992
וּבָעֵת -மற்றும்-இல்-காலத்தில் H6256
הַהִיא அதில் H1931
אַצְמִיחַ முளைக்கப்பண்ணுவேன் H6779
לְדָוִד -தாவீதுக்கு H1732
צֶמַח கிளையை H6780
צְדָקָה நீதியின் H6666
וְעָשָׂה -மற்றும்-செய்வான்
מִשְׁפָּט நியாயத்தையும் H4941
וּצְדָקָה -மற்றும்-நீதியையும் H6666
בָּאָרֶץ׃ -இந்த-தேசத்தில் H0776

> அந்நாட்களிலும், அக்காலத்திலும் தாவீதிற்கு நீதியின் கிளையை முளைக்கச்செய்வேன்; அவர் பூமியில் நியாயத்தையும் நீதியையும் நடப்பிப்பார்.

16
בַּיָּמִים -அந்த-நாட்களில் H3117
הָהֵם அவற்றில் H1992
תִּוָּשַׁע இரட்சிக்கப்படும் H3467
יְהוּדָה யூதா H3063
וִירוּשָׁלַ͏ִם -மற்றும்-எருசலேம் H3389
תִּשְׁכּוֹן குடியிருக்கும் H7931
לָבֶטַח பத்திரமாக H0983
וְזֶה -மற்றும்-இது H2088
אֲשֶׁר־ எதினால்-
יִקְרָא־ அழைக்கப்படும்- H7121
לָהּ அவளை
יְהוָה கர்த்தர் H3068
צִדְקֵנוּ׃ நம்-நீதி H6664
ס —

> அந்நாட்களில் யூதா காப்பாற்றப்பட்டு, எருசலேம் சுகமாகத் தங்கும்; அவர் எங்கள் நீதியாயிருக்கிற யெகோவா என்பது அவருடைய பெயர்.

17
כִּי־ ஏனெனில்-
כֹה இவ்வாறு H3541
אָמַר சொன்னார் H0559
יְהוָה கர்த்தர் H3068
לֹא־ இல்லை- H3808
יִכָּרֵת அறுப்புண்டுபோவான் H3772
לְדָוִד -தாவீதுக்கு H1732
אִישׁ மனிதன் H0376
יֹשֵׁב வீற்றிருக்கிற H3427
עַל־ -மேல்-
כִּסֵּא சிங்காசனத்தின் H3678
בֵית־ வீட்டின்-
יִשְׂרָאֵל׃ இஸ்ரவேலின் H3478

> இஸ்ரவேல் வம்சத்தின் சிங்காசனத்தின்மேல் உட்காரத் தகுதியான மனிதன் தாவீதிற்கு இல்லாமற்போவதில்லை.

18
וְלַכֹּהֲנִים -மற்றும்-ஆசாரியர்களுக்கும் H3548
הַלְוִיִּם -அந்த-லேவியர்களின் H3881
לֹא־ இல்லை- H3808
יִכָּרֵת அறுப்புண்டுபோவான் H3772
אִישׁ மனிதன் H0376
מִלְּפָנָי என்-முகத்துக்கு-முன்பாக H6440
מַעֲלֶה ஏறெடுக்கிற H5927
עוֹלָה சர்வாங்கதகனபலியை
וּמַקְטִיר -மற்றும்-தூபங்காட்டுகிற
מִנְחָה உணவுபலியை H4503
וְעֹשֶׂה־ -மற்றும்-செலுத்துகிற-
זֶּבַח பலியை H2077
כָּל־ எல்லா- H3605
הַיָּמִים׃ -அந்த-நாட்களும் H3117
ס —

> தகனபலியிட்டு, உணவுபலி செலுத்தி, அனுதினமும் பலியிடும் மனிதன் எனக்கு முன்பாக ஆசாரியருக்கும் லேவியருக்கும் இல்லாமற்போவதுமில்லை என்று யெகோவா சொல்லுகிறார் என்றார்.

19
וַיְהִי -மற்றும்-வந்தது H1961
דְּבַר־ வார்த்தையாகிய- H1697
יְהוָה கர்த்தரின் H3068
אֶל־ -நோக்கி- H0413
יִרְמְיָהוּ எரேமியாவுக்கு H3414
לֵאמוֹר׃ சொல்லி: H0559

> பின்னும் எரேமியாவுக்குக் யெகோவாவுடைய வார்த்தை உண்டாகி, அவர்:

20
כֹּה இவ்வாறு H3541 | אָמַר சொன்னார் H0559 | יְהוָה கர்த்தர் H3068 | אִם־ ஒருவேளை- | תָּפֵרוּ முறிப்பீர்களேயானால் | אֶת־ -ஐ H0853
בְּרִיתִי என்-உடன்படிக்கையை H1285 | הַיּוֹם -அந்த-பகலின் H3117 | וְאֶת־ -மற்றும்-ஐ H0853 | בְּרִיתִי என்-உடன்படிக்கையை H1285 | הַלָּיְלָה -அந்த-இரவின் H3915
וּלְבִלְתִּי -மற்றும்-விலகாதபடி H1115 | הֱיוֹת இருக்காமல் H1961 | יוֹמָם־ பகலும்- H3119 | וָלַיְלָה -மற்றும்-இரவும் H3915 | בְּעִתָּם׃ அவைகள்-காலத்தில் H6256

> குறித்த நேரங்களில் பகல்நேரமும் இரவுநேரமும் உண்டாகாமலிருக்க, நீங்கள் பகல் நேரத்தைக்குறித்து நான் செய்த உடன்படிக்கையையும், இரவு நேரத்தைக்குறித்து நான் செய்த உடன்படிக்கையையும் பொய்யாக்கினால்,

21
גַּם־ அப்போது- H1571 | בְּרִיתִי என்-உடன்படிக்கையும் H1285 | תֻּפַר முறிக்கப்படும் | אֶת־ -உடன் H0854 | דָּוִד தாவீதுக்கு H1732
עַבְדִּי என்-ஊழியக்காரனுக்கு H5650 | מִהְיוֹת־ இருக்காமல்- H1961 | לוֹ அவனுக்கு | בֵן மகன் | מֹלֵךְ ஆளுகிற | עַל־ -மேல்-
כִּסְאוֹ அவன்-சிங்காசனத்தின் H3678 | וְאֶת־ -மற்றும்-உடன் H0854 | הַלְוִיִּם -அந்த-லேவியரையும் H3881 | הַכֹּהֲנִים -அந்த-ஆசாரியர்களையும் H3548
מְשָׁרְתָי׃ என்-ஊழியக்காரர்களையும் H8334

> அப்பொழுது என் தாசனாகிய தாவீதுடன் நான் செய்த உடன்படிக்கையும், அவன் சிங்காசனத்தில் அரசாளும் மகன் அவனுக்கு இல்லாமற்போவதால் அவமாகும்; என் ஊழியக்காரராகிய லேவியருடனும் ஆசாரியருடனும் நான் செய்த உடன்படிக்கையும் அப்பொழுது அவமாகும்.

22
אֲשֶׁר எவ்விதமாக | לֹא־ இல்லை- H3808 | יִסָּפֵר எண்ணப்படாதோ | צְבָא சேனைகள் | הַשָּׁמַיִם -அந்த-வானங்களின் H8064
וְלֹא -மற்றும்-இல்லை H3808 | יִמַּד அளக்கப்படாதோ H4058 | חוֹל மணல் H2344 | הַיָּם -அந்த-கடலின் H3220 | כֵּן அவ்விதமாக
אַרְבֶּה பெருகப்பண்ணுவேன் | אֶת־ -ஐ H0853 | זֶרַע சந்ததியை H2233 | דָּוִד தாவீதின் H1732 | עַבְדִּי என்-ஊழியக்காரனின் H5650 | וְאֶת־ -மற்றும்-ஐ H0853
הַלְוִיִּם -அந்த-லேவியரை H3881 | מְשָׁרְתֵי ஊழியக்காரர்கள் H8334 | אֹתִי׃ என்னுடைய H0853 | ס —

> வானத்து நட்சத்திரங்கள் எண்ணப்படாததும் கடற்கரை மணல் அளக்கப்படாததுமாக இருக்கிறதுபோல, நான் என் தாசனாகிய தாவீதின் சந்ததியையும் எனக்கு ஊழியம் செய்கிற லேவியரையும் பெருகச்செய்வேன் என்று யெகோவா சொல்லுகிறார் என்றார்.

23
וַיְהִי -மற்றும்-வந்தது H1961 | דְּבַר־ வார்த்தையாகிய- H1697 | יְהוָה கர்த்தரின் H3068 | אֶל־ -நோக்கி- H0413 | יִרְמְיָהוּ எரேமியாவுக்கு H3414 | לֵאמֹר׃ சொல்லி: H0559

> பின்னும் எரேமியாவுக்குக் யெகோவாவுடைய வார்த்தை உண்டாகி, அவர்:

24
הֲל֣וֹא இல்லையா H3808
רָאִ֗יתָ பார்த்தாய் H7200
מָֽה־ என்ன- H4100
הָעָ֣ם -இந்த-ஜனங்கள்
הַזֶּה֮ இவர்கள் H2088
דִּבְּר֣וּ பேசினார்கள் H1696
לֵאמֹר֒ சொல்லி H0559
שְׁתֵּ֣י இரண்டு H8147
הַמִּשְׁפָּח֗וֹת -அந்த-குடும்பங்களை H4940
אֲשֶׁ֨ר எவற்றை
בָּחַ֧ר தெரிந்துகொண்டார் H0977
יְהוָ֛ה கர்த்தர் H3068
בָּהֶ֖ם அவற்றை
וַיִּמְאָסֵ֑ם -மற்றும்-வெறுத்தார்-அவற்றை
וְאֶת־ -மற்றும்-ஐ H0853
עַמִּי֙ என்-ஜனத்தை
יִנְאָצ֔וּן நிந்திக்கிறார்கள் H5006
מִֽהְי֥וֹת இருக்காமல் H1961
ע֛וֹד இன்னும் H5750
גּ֖וֹי ஜாதியாக
לִפְנֵיהֶֽם׃ அவர்கள்-முன்பாக H6440
ס —

> யெகோவா தெரிந்துகொண்ட இரண்டு வம்சங்களையும் வெறுத்துப்போட்டாரென்று இந்த மக்கள் சொல்லி, தங்களுக்கு முன்பாக என் மக்கள் இனி ஒரு தேசமல்லவென்று அதை இழிவுபடுத்துகிறார்கள் என்பதை நீ காண்கிறதில்லையோ?

25
כֹּ֚ה இவ்வாறு H3541
אָמַ֣ר சொன்னார் H0559
יְהוָ֔ה கர்த்தர் H3068
אִם־ ஒருவேளை-
לֹ֥א இல்லை H3808
בְרִיתִ֖י என்-உடன்படிக்கை H1285
יוֹמָ֣ם பகலும் H3119
וָלָ֑יְלָה -மற்றும்-இரவும் H3915
חֻקּ֛וֹת கட்டளைகளை H2708
שָׁמַ֥יִם வானங்களின் H8064
וָאָ֖רֶץ -மற்றும்-பூமியின் H0776
לֹא־ இல்லை- H3808
שָֽׂמְתִּי׃ வைத்தேனேயானால்

> வானத்திற்கும் பூமிக்கும் குறித்திருக்கிற நியமங்களை நான் காக்காமல், பகல் நேரத்தையும் இரவு நேரத்தையும் குறித்து நான் செய்த உடன்படிக்கை அழிந்துபோகிறது என்றால்,

26
גַּם־ அப்போது- H1571
זֶ֣רַע சந்ததியையும் H2233
יַעֲק֞וֹב யாக்கோபின் H3290
וְדָוִ֣ד -மற்றும்-தாவீதின் H1732
עַבְדִּ֗י என்-ஊழியக்காரனின் H5650
אֶמְאַס֙ வெறுப்பேன்
מִקַּ֤חַת எடுக்காதபடி H3947
מִזַּרְעוֹ֙ அவன்-சந்ததியிலிருந்து H2233
מֹֽשְׁלִ֔ים ஆளுகிறவர்களை H4910
אֶל־ -நோக்கி- H0413
זֶ֥רַע சந்ததிக்கு H2233
אַבְרָהָ֖ם ஆபிரகாமின் H0085
יִשְׂחָ֣ק ஈசாக்கின் H3446
וְיַעֲקֹ֑ב -மற்றும்-யாக்கோபின் H3290
כִּֽי־ ஏனெனில்-
]אשוב[ — H7725
)אָשִׁ֥יב( திருப்புவேன் H7725
אֶת־ -ஐ H0853
שְׁבוּתָ֖ם அவர்கள்-சிறையிருப்பை H7622
וְרִחַמְתִּֽים׃ -மற்றும்-இரக்கம்பண்ணுவேன்-அவர்களுக்கு H7355
ס —

> அப்பொழுது நான் யாக்கோபின் சந்ததியையும், என் தாசனாகிய தாவீதின் சந்ததியையும் தள்ளி, நான் ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு என்பவர்களின் சந்ததியை ஆளத்தகுதியானவர்களை அதிலிருந்து எடுக்காமல் வெறுத்துவிடுவேன்; அவர்களுடைய சிறையிருப்பை நான் திருப்பி, அவர்களுக்கு இரங்குவேன் என்று யெகோவா சொல்லுகிறார் என்றார்.